# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093866

1. District மாவட்டம் : DVAC PS: காவல்நிலையம் DVAC, HQRS Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 8 Date: நாள் 11-03-2019

2. (i) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act. 2018 Sections பிரிவுகள்: 7, 12
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 06.03.19 Date to : நாள் வரை 06.03.2019
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.00 hrs Time to : நேரம் வரை 23.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.03.2019 Time நேரம் : 23.45 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.03.2019 Time நேரம் : 14.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North, 30 kms
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Office of the Sub Registrar, Thiruvottiyur, No. 2/5, Market lane Kaladipettai, Chennai - 19.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. V. Sumathi
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் -
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு -
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் -
Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் District Inspection Cell Officer, Chennai.
(g) Address : முகவரி Chennai Collectorate, Chennai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. A. Raji, Sub-Registrar, Thiruvottiyur.
2) Tr. K. Jeyaraman, Office Assistant, o/o the SR, Thiruvottiyur
3) Tr. S. Senthil Kumaraswamy, S/o Subramanian. (Private Individual)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
To get permission from the Directorate.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

An amount of Rs. 33,470/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Content is enclosed in a Seperate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. K.S. Anitha Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Information Sent to the Complainant

K.S. [signature] 11/03/19.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11.03.2019 at 14.00 hrs

Name: பெயர் K.S. Anitha
Rank: நிலை Inspector of Police No. எண் .........
Special Investigation Cell, DVAC, Chennai.

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண். 8/2019, சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் சட்ட பிரிவு 7 மற்றும் 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி பின்வருமாறு.**

திருமதி.வே.சுமதி, மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை என்பவர் சென்னை -19, காலடிப்பேட்டை, மார்கெட் லைன், எண்- 21/8, என்ற முகவரியில் இயங்கும் திருவொற்றியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை தொடர்பாக அளித்த புகார் மனு 06.03.2019ம் தேதி இரவு 11.45 மணியளவில் பெறப்பட்டது. மேற்படி புகார் மனு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டது. பின்னர் இயக்குநரக உத்தரவுப்படி இன்று 11.03.2019ம் தேதி மதியம் 13.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. திருமதி.வே.சுமதி அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.வே.சுமதி,<br>துணை ஆட்சியர் / மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம்,<br>சென்னை-1 | காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

அ/136/2019 நாள் - 06.03.2019

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-19, காலடிப்பேட்டை, மார்கெட் லைன், எண்.21/8 என்ற முகவரியில் இயங்கும் திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள். 06.03.2019 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

-----

சென்னை மாவட்ட ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 06.03.2019-ம் தேதி சென்னை-19, காலடிப்பேட்டை, மார்கெட் லைன், எண்.21/8 என்ற முகவரியில் இயங்கும் திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.33,470/- (ரூபாய் முப்பத்தி மூன்றாயிரத்து நானூற்றி எழுபது மட்டும்) மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் ஆகியவைகள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது.

மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம்/- வே.சுமதி
மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர்,
சென்னை-1

To Tmt.K.S.Anitha, Inspector to regiater an FIR and Investigate. Sd/- Tr.Kumarakurubaran 11.03.2019 DSP/ SIC-2.

Madam, Received the petition on 06.03.2019 at 23.45hrs. This information was communicated to the Directorate of Vigilance and Anti – Corruption, Chennai. After getting permission from the Directorate, I register a case in V&AC, HQRS Cr.No.8/2019 u/s 102 CrPC and section 7,12 of Prevention of Corruption (Amendment) Act 2018 this day (11.03.2019) at 13.00hrs and taken up for investigation sd/- K.S.ANITHA, Inspector of Police, Vigilance and Anti – Corruption, SIC, 11.03.2019.

<u>இருதுறை கூட்டுத்தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு.</u>

சென்னை மாவட்ட ஆய்வு குழு அலுவலருடன் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் இணைந்து இன்று 06.03.2019-ம் தேதி சென்னை-19, காலடிப்பேட்டை, மார்கெட் லேன், எண்.21/8 என்ற முகவரியில் இயங்கி வரும் திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை.

---

| | | |
|---|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | 1. | திருமதி.வே.சுமதி,<br>சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1. |
| | 2. | திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 3. | திரு.எஸ்.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 4. | திருமதி.சா.ஜீடி அபிகெய்ல்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

சென்னை-19, காலடிப்பேட்டை, மார்கெட் லைன், எண்.21/8 என்ற முகவரியில் இயங்கும் திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கும் மற்றும் வில்லங்க சான்றிதழ்கள் பெறுவதற்கும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த நம்பகமான தகவல் அடிப்படையில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சென்னை திருவொற்றியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை கூட்டுத்தணிக்கை நடத்திட முடிவு செய்து இன்று 06.03.2019ந் தேதி மாலை சுமார் 6 மணியளவில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.வே.சுமதி மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்ணகாணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப்பிரிவு காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் தலைமையிலான குழுவினருடன் இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திருவெற்றியூர் சார் பதிவாளர் அலுவலகம் எண். 21/8, மார்கெட் லைன், காலடிப்பேட்டை, சென்னை-19 என்ற முகவரியில் வடக்கு தெற்காக செல்லும் திருவொற்றியூர் நெடுஞ்சாலையின் வடக்கு நோக்கி முதல் தளத்தில் அமைந்துள்ளது.

திருவொற்றியூர் சார் பதிவாளர் திருமதி.ராஜி அவர்கள் சார் பதிவாளர் அலுவலகத்தி இன்று (06.03.2019) வசூல் செய்த லஞ்சப்பணத்துடன் UBER கால் டாக்சி பதிவு எண்.TN-10-AX-9505 என்ற வாகனத்தில் ஏறி வீட்டிற்கு புறப்பட தயாராக இருப்பதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் திருவொற்றியூர் சார் பதிவாளர் அலுவலகத்தின் கீழே மார்கெட் லேனில் புறப்பட தயாராக இருந்த மேற்படி கால் டாக்சியை இருதுறை கூட்டுத் தணிக்கைக் குழுவினர் இடைமறித்து உள்ளே அமர்ந்திருந்த திருவொற்றியூர் சார் பதிவாளர் திருமதி.ராஜி அவர்களிடம் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் தன்னையும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்களையும் சார் பதிவாளர் அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டார். மேற்படி கால் டாக்சியின் டிரைவரை விசாரிக்க தனது பெயர் பிரேம்குமார் என்றும் தான் சென்னை அரும்பாக்கத்தில் இயங்கி வரும் UBER Travels என்ற நிறுவனத்தில் டிரைவராக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். மேலும் திருமதி.ராஜி என்ற பெயரில் திருவொற்றியூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து டாக்டர் குருசாமி ரோடு சேத்துப்பட்டு வரை டிராப் செய்ய மேற்படி UBER கால்டாக்சியை புக் செய்திருந்ததாகவும் கால் டாக்சி டிரைவர் திரு.பிரேம் குமார் தெரிவித்தார்.

மேற்படி காரின் பின் இருக்கையின் இடதுபக்கம் சார் பதிவாளர் திருமதி.ராஜி அமர்ந்திருந்தார். அவருக்கு வலது பக்கம் சந்தன நிறத்தில் ரெக்ஸின் பேக் ஒன்று இருந்தது. அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டதற்கு அவர் மேற்படி பேக்கை திறந்து தனது கருப்பு நிற மணிபர்சை எடுத்து திறந்து அதிலிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.13,400/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 03 | Rs.6,000 |
| 2 | Rs.500 x 14 | Rs.7,000 |
| 3 | Rs.200 x 01 | Rs.200 |
| 4 | Rs.100 x 01 | Rs.100 |
| 5 | Rs. 10 x 10 | Rs.100 |
| | **Total** | **Rs.13,400** |

பின்னர் அந்த பணம் குறித்து திருமதி.ராஜி அவர்களிடம் கேட்ட போது இன்று (06.03.2019) பத்திர பதிவு செய்ய வந்திருந்த பொதுமக்களிடமிருந்து வாங்கிய பணம் என்று தெரிவித்தார். எனவே சந்தேகத்தின் அடிப்படையில் சார் பதிவாளர் திரு.ராஜி அவர்களை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து வந்து அவரது இருக்கையில் அமர வைக்கப்பட்டார். மேற்படி சார் பதிவாளரிடம் அவரது சொந்தப்பணம் குறித்து கேட்க தான் இன்று (06.03.2019)ந் தேதி பணம்

ரூ.2,000/- கொண்டு வந்திருந்ததாகவும், அந்த விவரத்தை தான் தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். அவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு ரூ.2000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மீதிப்பணம் ரூ.11,400/- லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி சார்பதிவாளரின் கைப்பை அவருக்கு ஆதாரமாக அவருடைய பான் கார்டு (பான் கார்டு எண்.AUNPR2093K) மற்றும் ஆதார் கார்டு ஆகியவை இருந்தது. அத்துடன் அந்த பேக்கில் அவரது தனிப்பட்ட உடைமைகள் காணப்பட்டது. மேற்படி கைப்பையில் காணப்பட்ட பான் கார்டு (பான் கார்டு எண்.AUNPR2093K) மற்றும் ஆதார் கார்டு கைப்பையுடன் சார் பதிவாளரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் UBER கால் டாக்சி பதிவு எண்.TN-10-AX-9505 என்ற வாகனத்தின் டிரைவரிடம் திருவொற்றியூர் சார் பதிவாளர் திருமதி.ராஜி அவர்கள் பணம் கொடுத்து வைத்திருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் திரு.பிரேம்குமார் அவர்களை விசாரித்த போது மேற்படி நபர் தனது காரில் கடந்த ஒரு வார காலமாக டிரிப் தொடர்பாக வசூல் செய்த பணம் ரூ.12050/- வைத்திருப்பதாக தெரிவித்தார். மேலும் திரு.பிரேம்குமார் தான் பணிபுரியும் UBER கால் டாக்சியின் ஓனர் திரு.செந்தில்குமார் வெளியூர் சென்றிருப்பதால் டிரிப் மூலம் வசூல் செய்த பணம் ஒப்படைக்க முடியவில்லை என தெரிவித்தார். இது தொடர்பாக மேற்படி திரு.செந்தில்குமார் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு விசாரித்தபோது அவரும் அவ்வாறே கூறினார். ஆதலால் டிரைவர் திரு.பிரேம்குமார் கூறிய விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு பணம் ரூ.12050/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் பிரதான அறையில் கிழக்கு நோக்கி சார் பதிவாளர் இருக்கையும், அதன் அருகில் திருமணங்களை பதிவு செய்யும் உதவியாளர் இருக்கையும் இருந்தது. அந்த பிரதான அறையின் வாசல் அருகே மரத்தினால் ஆன பெஞ்ச்-யில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் திரு.கே.ஜெயராமன், த/பெ கோவிந்தன் என்றும் தான் இந்த அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிவதாகவும், பதிவு ஆவணத்திற்கு முத்திரையிடும் பணியை செய்து வருவதாக தெரிவித்தார். மேலும் திரு.கே.ஜெயராமன் அவர்களிடம் அவர் வைத்துள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்ட் பாக்கெட்டின் பர்சிலிருந்து ரூ.1320/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு தனது சொந்தப் பணம் என்று தெரிவித்தார். இது குறித்து தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் சரிபார்த்தில் அவரது பெயருக்கு நேரே ரூ.300/- என எழுதப்பட்டிருந்தது. மேற்படி நபரிடம் இது குறித்து கேட்க, பதில் கூறாமல் மௌனமாக இருந்தார். ஆதலால் பணம் இருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் ரூ.300/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மீதிப்பணம் ரூ.1,020/- லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தின் பிரதான அறையை தொடர்ந்து கிழக்கு பக்கத்தில் அலுமினிய தடுப்பு கொண்ட கணிணி அறை அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தில் கணினி அறையில் (1) திருமதி.கலாவதி க/பெ. விஜயன், உதவியாளர் (2) திரு.லட்சுமி காந்தன் த/பெ. குமார், உதவியாளர், (3) திருமதி.காமாட்சி க/பெ.பாபு, கேமரா ஆப்ரேட்டர் (தற்காலிக பணியாளர்), பத்திரப்பதிவு செய்யப்படும் ஆவணங்களின் நகல்களை குறுந்தகட்டில் பதிவு செய்து தரும் பணி மற்றும் (4) செல்வி எஸ்.ஜெமிலா, த/பெ.சையது அலி ஆகியோர் பணியில் இருந்தனர். மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் கணிணி அறையின் உள்ளே நுழைந்ததும் இடது பக்கத்தில் இரும்பு கீரில் கொண்ட அலுமினிய கதவை கொண்ட ஜன்னல் அருகே காணப்பட்ட கணிணி மேஜையின் பின்புறம் ரூபாய் நோட்டுக்கள் தனித்தனியே மடித்த நிலையில் கீழே கிடந்தது. அந்த நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.200 x 01 | Rs.200 |
| 2 | Rs.100 x 08 | Rs.800 |
| 3 | Rs.20 x 02 | Rs.40 |
| 4 | Rs.10 x 01 | Rs.10 |
| | **Total** | **Rs.1050** |

இந்த பணம் குறித்து மேற்படி கணிணி மேஜையின் எதிரில் இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.கலாவதி, உதவியாளர் அவர்களிடம் கேட்டதற்கு அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் சார் பதிவாளருக்கு வழங்கப்படவுள்ள லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் சொந்தப் பணம் குறித்து கேட்டதற்கு, தான் இன்று (06.03.2019) சொந்த பணம் எதுவும் கொண்டுவரவில்லை என்று தெரிவித்தார்.

சார் பதிவாளர் அலுவலகத்தின் பிரதான அறையின் தெற்கில் வடக்கு நோக்கி ஆவண வைப்பு அறை காணப்பட்டது. அந்த அறையின் நுழைவு வாயில் கதவிற்கு அருகே கையில் நின்று கொண்டிருந்த ஒரு நபரை மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் கேட்க, அவர் தனது பெயர் செந்தில் குமாரசாமி, த/பெ.சுப்பிரமணியன் என்றும் தனது நண்பர் கனகராஜ் என்பவருடைய பத்திரப்பதிவு தொடர்பாக சார் பதிவாளரை பார்க்க வந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி நபர் தனது வலது கையில் வைத்திருந்த வெள்ளை நிற பேப்பர் கவரில் உள்ளதை குறித்து விசாரித்த போது, திரு.செந்தில் குமாரசாமி மேற்படி கவரில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.20,000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 07 | Rs.14,000 |
| 2 | Rs.500 x 10 | Rs.5,000 |
| 3 | Rs.200 x 04 | Rs.800 |
| 4 | Rs.100 x 01 | Rs.100 |
| 5 | Rs. 20 x 02 | Rs.40 |
| 6 | Rs. 10 x 06 | Rs.60 |
| | **Total** | **Rs.20,000** |

பின்னர் அந்த பணம் குறித்து திரு செந்தில் குமாரசாமி கேட்ட போது அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் சார் பதிவாளருக்கு வழங்கப்படவுள்ள லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. சார் பதிவாளர் அலுவலகத்தின் பிரதான அறையில் உள்ளே நுழைந்ததும் உட்கார்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் கோவர்த்தனன் என்றும் தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து விசாரிக்க தனது பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.420/- இருந்தது. இது குறித்து தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் சரிபார்த்தில் அவரது பெயருக்கு நேரே ரூ.2000/- என எழுதப்பட்டிருந்தது. மேற்படி நபரிடம் இது குறித்து கேட்க, பதில் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.420/- அவரது சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

மேலும் சார் பதிவாளர் இருக்கைக்கு எதிரில் நின்றிருந்த நபரை விசாரிக்க தனது பெயர் ஆர்.ஏழுமலை, த/பெ.ரோசையன் என்றும் தான் திரு.மோகன கண்ணன் என்ற பத்திர எழுத்தர் அவர்களின் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் இன்றைய தேதியில் ஆவணம் தொடர்பாக சார் பதிவாளர் காண வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப் பார்த்தபோது அதில் ரூபாய் 8,000/- இருந்தது. இந்த பணம் குறித்து கேட்டதற்கு மேற்படி நபர் சென்னை-19, காலடிபேட்டை, ஜானகியம்மாள் எஸடேட், எண்.70 என்ற முகவரியில் தனது வீடு உள்ளதாகவும் அந்த வீட்டில் கீழ் போர்ஷனில் திரு.ஆனந்தன் என்பவர் வாடகைக்கு குடியிருந்து வருவதாகவும், திரு.ஆனந்தன் வாடகையாக ரூ.8000/-தன்னிடம் கொடுத்தாக திரு.ஏழுமலை தெரிவித்தார். இது தொடர்பாக மேற்படி திரு.ஆனந்தன் என்பவரிடம் செல்போனில் பேசியபோது தான் வீட்டு வாடகையாக பணம் ரூ.8000/- வீட்டின் ஓனர் திரு.ஏழுமலை அவர்களிடம் கொடுத்ததாக தெரிவித்தார். எனவே திரு.ஆர்.ஏழுமலை

என்பவரின் விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு மேற்படி பணம் ரூ.8000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

இந்த இருதுறை கூட்டு தணிக்கையின்போது உடைமைக்களுக்கோ ஆவணங்களுக்கோ எந்த சேதமும் ஏற்படவில்லை. சார் பதிவாளர் அலுவலக அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு செய்யப்படவில்லை. சோதனையின் போது பெண் காவல் ஆய்வாளர் மற்றும் பெண் காவலர்கள் பணியில் இருந்தனர். இந்த சோதனை 06.03.2019-ந் தேதி மாலை 6 மணிக்கு தொடங்கி 06.03.2019-ம் தேதி இரவு 11.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/-திருமதி.வே.சுமதி,
சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,
சென்னை மாவட்டம்,
சென்னை-1.

ஒப்பம்/-திருமதி.கே.எஸ்.அனிதா,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.எஸ்.வள்ளிநாயகம்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.சா.ஜீடி அபிகேய்ல்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.எ.ராஜி,
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்,
திருவொற்றியூர், சென்னை.

ஒப்பம்/-திரு.ஜெயராமன்,
அலுவலக உதவியாளர்,
சார் பதிவாளர் அலுவலகம்,
திருவொற்றியூர், சென்னை.

(K.S. ANITHA)
Inspector of Police
Special Investigation Cell
Vigilance and Anti-Corruption
Chennai - 600 016.